# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண். 45/2017</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. ராஜா முகமது, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு ஜூலை மாதம் 04-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 04.07.2023**

**பெயர் - ராஜ்கமல்**

**த/பெ - நேசமணி**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12.27 p.m.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> -**

12. எனது வழக்கை நீரூபிக்க எத்தனை ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எண்ணிக்கையில் சரியாக ஞாபகம் இல்லை. நிலவரி ரசீதுகள், அக்ரிமென்ட் போன்றவற்றை தாக்கல் செய்துள்ளேன். கடைசியாக எப்போது ராஜ் செட்டியாரை நான் பார்த்தேன் என்றால் பத்திரத்தை செல்வைத்தபோது நான் பார்த்தேன். செல்வைத்தபோது என்றால் என்ன மேற்படி பத்திரத்தை உயிர்பிப்பதற்காக ரூபாய் 15,000/- கொடுத்து எனது தந்தையார் நேசமணி ராஜ் செட்டியாருக்கு கொடுத்து அதை உயிர்பித்தார். கிரைய ஒப்பந்தம் செய்தபோது யாரிடமெல்லாம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் ராஜ் செட்டியார் மற்றும் அவரது மகன்கள் சுதர்சணம் மற்றும் பிரபாகரன் ஆகியோர் கையொப்பம் இட்டனர். இளங்கோவன் கையொப்பம் இடவில்லை. தாவா சொத்து யாருடையது என்றால் ராஜ் செட்டியாருடையது.

13. தாவா சொத்து ராஜ் செட்டியாருடையதாக இருந்த நிலையில் எதற்காக அவரது மகன்களிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் பின்னிட்ட நாளில் ராஜ் செட்டியார் தனக்கு தெரியாது என கூறிவிட்டால் என்ன செய்வது என்று அவருடைய மகன்களிடம் சாட்சிக்காக கையொப்பம் பெறப்பட்டது. மேற்படி ஏற்ப்படுத்தப்பட்டபோது யார் யார் அங்கே இருந்தது

என்றால் ராஜ் செட்டியார், அவருடைய மனைவி மற்றும் அந்த ஊரை சார்ந்த இரு சாட்சிகள் அங்கே இருந்தனர். எனது தரப்பில் யார் யார் இருந்தது என்றால் எனது தந்தை நேசமணி, எனது தாயார் நிர்மலா மற்றும் நான் ராஜ் கமல் ஆகியோர் இருந்தோம். ராஜ் செட்டியாரின் மனைவி உடன் இருந்ததாக கூறும் நிலையில் அவரிடம் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் கையொப்பம் கேட்டபோது ராஜ் செட்டியார் தாவா சொத்து தன்னுடையது என்று கூறி அவர் மட்டுமே கையொப்பம் இட்டார். மனைவியிடம் கையொப்பம் பெறவில்லை அதனால் இரு மகன்களிடம் கையொப்பம் பெற்றோம். முதலில் ராஜ் செட்டியாரின் இரு மகன்கள் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டதாக நான் கூறியுள்ளேன் என்றும் பின்னர் ஒப்பந்தம் போடும்போது யார் யார் உடன் இருந்தது என்று கேட்டதற்கு ராஜ் செட்டியார் மற்றும் அவரது மனைவி மற்றும் அவரது ஊரை சார்ந்த இரு நபர்கள் ஆகியோர் மட்டும் இருந்ததாக நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

14. நான் ராஜ் செட்டியாரின் மகன்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். விற்பனை ஒப்பந்த பத்திரத்தில் யார் யார் சாட்சிகள் என்றால் பெயர் ஞாபகம் இல்லை. ஆளைபார்த்தால் தெரியுமா என்றால் தெரியும். அவரை நீதிமன்றத்தில் விசாரிக்கும் உத்தேசம் உள்ளதா என்றால் உள்ளது. ஒப்பந்தத்தில் உள்ள எந்த சாட்சிகளை நான் இந்த வழக்கில் விசாரிக்க உத்தேசமாக உள்ளேன் என்றால் ராஜ் செட்டியாரின் மகன்களை விசாரிக்க உத்தேசமாக உள்ளேன். எதன் அடிப்படையில் ராஜ் செட்டியாரின் மகன்களிடம் நான் ஒப்பந்தத்தில் கையொப்பம் பெற்றேன் என்றால் எனது தந்தையார் முடிவின் அடிப்படையில் பெற்றேன். மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் வரவு ரீசிதுகள் உள்ளது என்றும் அதில் உள்ள கையொப்பங்கள் யாருடையது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. 20.03.2004 அன்று ஒரு பண வரவு ரசீது ஏற்ப்படுத்தப்பட்டுள்ளது என்றும் நான் அப்போது எனது தந்தையாருடன் இருந்தேனா என்றால் உடன் இருந்தேன். உண்மையிலேயே நான் அந்த இடத்தில் இருந்திருந்தால் பண வரவு ரசீது அந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டதா அல்லது ஏற்க்கெனவே எழுதப்பட்டு இருந்ததில் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் அந்த இடத்தில் தான் எழுதி கையொப்பம் பெறப்பட்டது.

15. எனது தந்தையார் என்ன படித்துள்ளார் என்றால் இளங்களை வரலாற்றுதுறையில் பட்ட படிப்பு பத்தார் ஆனால் பட்டம் பெற வில்லை. ராஜ் செட்டியார் என்ன படித்துள்ளார்

என்று தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பண வரவு ரசீது கையொப்பம் இடும் போது யார் யார் அங்கே இருந்தது என்றால் ராஜ் செட்டியார் இருந்தார் உடன் யார் இருந்தது என்று ஞாபகம் இல்லை. அவருடன் அவரது மகன்கள் இருந்தனரா என்றால் ஞாபகம் இல்லை. ஊரை சார்ந்த நபர்கள் இருந்தனரா என்றால் ஞாபகம் இல்லை. யார் யார் அந்த பண வரவு ரசீதில் சாட்சி கையொப்பம் இட்டது என்று ஞாபகம் உள்ளதா என்றால் கூட்டமாக இருந்ததால் ஞாபகம் இல்லை. கூட்டம் என்றால் எத்தனை நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சுமார் 5 அல்லது 6 நபர்கள் இருந்திருப்பார்கள். அந்த கூட்டத்தில் இருந்தவர்கள் எந்த ஊரை சார்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது.

16. பண வரவு ரசீதில் உள்ள வாசகங்கள் யாரால் எழுதப்பட்டது என்றால் உடன் இருந்தவர்கள் எழுதினார்கள். எழுதியவர்களுக்கு பணம் கொடுத்தோமா என்றால் இல்லை. பணவரவு ரசீதில் எதற்காக ராஜ் செட்டியாரின் மகன்களிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் ராஜ் செட்டியார் கிரைய பத்திரத்தில் அனைவரது கையொப்பமும் பெற்று கொடுப்பதாக கூறினார் மேலும் இது தன்னுடைய சொத்த என்று கூறியதால் மட்டுமே ரசீதுகளில் கையொப்பம் பெறவில்லை. மேற்படி ஆவணங்கள் எங்கு எழுதப்பட்டது என்றால் ராஜ் செட்டியாரின் வீட்டில் எழுதப்பட்டது. மேற்படி ராஜ் செட்டியாரின் வீட்டில் ராஜ் செட்டியாருக்கு வேண்டிய நபர்கள் தான் இருந்தார்கள் என் தரப்பில் நானும் எனது தந்தையாரும் தான் சென்று இருந்தோம். வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றும் ஒப்பந்தம் காலாவதி ஆன காரணத்தினால் அதை காலநீட்டிப்பு செய்யவேண்டி நாங்களாக ஒரு ரசீது ஏற்ப்படுத்தினோம் என்றால் சரியல்ல.

17. ராஜ் செட்டியார் என்று இறந்தார் என்றால் தெரியாது. மேற்படி பத்திரத்தின் அடிப்படையில் கிரைய ஆவணம் பதிவு செய்ய முயற்சி செய்தோமா என்றால் செய்தோம். எழுத்து பூர்வமாக பிரதிவாதிகளுக்கு இது குறித்து அறிவிப்பு அனுப்பினோமா என்றால் அனுப்பினோம். சாட்சி தற்போது மாற்றி வாய்மொழியாக அறிவிப்பு கொடுத்ததாகவும் நேராடியாக ராஜ் செட்டியார் வீட்டிற்கு சென்று கூறியதாகவும் எழுத்து மூல அறிவிப்பு கொடுக்கவில்லை என்றும் தெரிவிக்கிறார். மேற்படி ரசீதில் உள்ள கையொப்பம் ராஜ் செட்டியார் உடையது அல்ல என்றால் சரியல்ல. பண வரவு ரசீது உண்மையில் இருந்திருந்தால் அப்போது அங்கு யார் யார் இருந்தார்கள் யார் யார் கையொப்பம் இட்டார்கள் என்று நான் கூறியிருப்பேன் என்றும் ரசீது எங்களால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

நீதிமன்றத்தில் தவறான உள்நோக்கத்துடன் ஆவணங்களை திருத்தம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் கூறினால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்- 01.04 p.m.**